# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2194/25 - 2020 සැප්තැම්බර් මස 22 වැනි අඟහරුවාදා - 2020.09.22

*2194/25 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் தொடர்பு இல.: 13/97/FH/523.
பிரதேச செயலாளர் தொடர்பு இல.: கா. சு/05/31.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின், காலி மாவட்டத்தில், ஹிக்கடுவை பிரதேச செயலகப் பிரிவில், இல. 51, தொடந்துவ கிராம அலுவலர் பிரிவின், தொடந்துவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் முறையாக செய்யப்பட்ட 3016 ஆம் இலக்க, 2001.03.28 ஆந் திகதிய அடிப்படை வரைபடத்தின் 01 ஆம் 02 ஆம் இலக்க காணித் துண்டுகளின் மூலம் குறித்துக்காட்டப்பட்டுள்ள 0.3496 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய பரதொல்ல மோதரவத்த எனும் பெயருடைய கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள்:

1. **துண்டு இல. 01 - காணியின் பெயர் : பரதொல்ல மோதரவத்த; விஸ்தீரணம்: 0.3496 ஹெக்டயார்**

வடக்கு : கடற்கரை, தொடந்துவ தர்மசேன ஸ்டவர எனும் உரிமையாளர் எனக் கூறப்படுகின்ற பின்வத்த மற்றும் சுங்க வீதி; கிழக்கு : சுங்க வீதி, துண்டு இல. 02, ஏ. எம். ரி. அர்சகுலசூரிய எனும் உரிமையாளர் எனக்கூறப்படுகின்ற பரதொல்ல மோதரவத்த; தெற்கு : ஏ. எம். ரி. அர்சகுலசூரிய எனும் உரிமையாளர் எனக் கூறப்படுகின்ற பரதொல்ல மோதரவத்த மற்றும் கே. ஜீ. சுகததாச மற்றும் மற்றொரு உரித்தாளி எனக் கூறப்படுகின்ற ஜன்துங்வத்த; மேற்கு : கடற்கரை.

2. **துண்டு இல. 02 - காணியின் பெயர் : பரதொல்ல மோதரவத்த; விஸ்தீரணம்: 0.0428 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 01 மற்றும் சுங்க வீதி; கிழக்கு : சுங்க வீதி; தெற்கு : துண்டு இல. 01; மேற்கு : துண்டு இல. 01.

1A - G 32952 - 30 (2020/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்கு ஹிக்கடுவை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. எம். ஏ. யு. ஜீ. காரியவசம்,
பிரதேச செயலாளர்,
ஹிக்கடுவை.

பிரதேச செயலகம்,
ஹிக்கடுவை,
2020, செத்தெம்பர் 18.

10 - 280